2013 ஏப்ரல் 30]

**365—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***14413—திரு. ஆர்.என். கிட்டுசாமி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மொடக்குறிச்சி தொகுதி, வடுகப்பட்டி பேரூராட்சி, கஸ்தூரிபா கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், கஸ்தூரிபா கிராமம், ஜெயராமபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணை நிலை எண் 131 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 16-4-2012-ல் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, தற்போது ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.*

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் வேதனையைத் தீர்த்தவர், அவர்தம் விழிகளில் நிறைந்தவர், காவேரியை மீட்ட வெற்றித் திருமகள் (மேசையைத் தட்டும் ஒலி) விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் கொடுத்து, ஏழை மக்களின் விழிநீரைத் துடைத்தவர், 7½ கோடி தமிழ் மக்களின் விடிவெள்ளி, 1½ கோடி கழகத் தொண்டர்களின் காவல் தெய்வம், நாளைய பாரதத்தின் ஒளிவிளக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-05*

பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதி, வடுகப்பட்டி பேரூராட்சி, கஸ்தூரிபா கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர், நான் வணங்கும் தெய்வம், ஏழைகளின் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மொடக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இந்த ஆண்டே புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், கஸ்தூரிபா கிராமம், ஜெயராமபுரத்தில் துவக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையம், கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவு அறக்கட்டளைக்குச் சொந்தமான கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டிட ஒரு ஏக்கர் நிலம் தானமாக வழங்க மேற்படி அறக்கட்டளை ஒப்பந்தம் செய்து, வருகின்ற மே மாதத்திற்குள் ஒப்படைப்பதாகத் தெரிவித்துள்ளது. புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 22 இலட்சம் நிதியொதுக்கீடு செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், நிலம் கிடைக்கப் பெற்றவுடன் கட்டடம் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அரச்சலூர் மற்றும் கொடுமுடி ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பட்டு வருகின்ற சித்த

2013 ஏப்ரல் 30]

மருத்துவப் பிரிவுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா மற்றும் சித்த மருத்துவப் பிரிவுபோல், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஓமியோபதி மருத்துவப் பிரிவும் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆயுஷ்' என அழைக்கப்படும் ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா, ஓமியோபதி என ஐந்து வகையான இந்திய மருத்துவ முறையில் தமிழகத்திலுள்ள 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில், பெரும்பாலான ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவம் மற்றும் ஓமியோபதி பிரிவுகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரச்சலூர், கொடுமுடி பகுதிகளிலே சித்த மருத்துவமனை மற்றும் ஆயுர்வேத மருத்துவமனை வேண்டுமென்று கோரியுள்ளார். ஆகவே, அத்தகைய பிரிவுகள் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று எதிர்வருகின்ற காலங்களில் தேவைக்கேற்ப அவை ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### சென்னை, வண்டலூரில் புறநகர் பேருந்து நிலையம் அமைத்தல்–முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.